

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் – காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியக்கழக துணைச் செயலாளர் மாகறல் என்.வீரராகவனின் மகன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.சவீன் – கே.எஸ். பொற்கொடி இணையரின் திருமணத்தை ‘குறிஞ்சி’ இல்ல வளாகத்தில் நேற்று நடத்தி வைத்தார். மணமக்கள் இருவரும், பெரியாரும் – பகுத்தறிவும் போல, அண்ணாவும் – மொழி உரிமையும் போல, கலைஞரும் – கழகமும் போல, கழகத்தலைவர் அவர்களும் – தமிழ்நாடும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி மகிழ்ந்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் கிழக்கு மாவட்டம் எருமப்பட்டி ஒன்றியம் பொன்னேரியைச் சேர்ந்த வழக்கறிஞர் எஸ்.தணிகை செல்வம் – வழக்கறிஞர் இ.நந்தினியின் திருமணத்தை குறிஞ்சி இல்லத்தில் நேற்று நடத்தி வைத்து பகுத்தறிவும் சுயமரியாதையும் நிறைந்த இல்வாழ்வை மகிழ்ச்சியுடன் அமைத்துக் கொள்ள மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தார்.

## குழந்தை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும்

# அழகான தமிழ்ப் பெயரைச் சூட்டுங்கள்!

### சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

சென்னை,பிப்.4-

**சென்னை, குறிஞ்சி இல்லத்தில் காஞ்சிபுரம் தெற்கு ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளர் சவீன்- பொற்கொடி இணையரின் திருமணம், நாமக்கல் மாவட்டம், எருமைப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் தணிகைச் செல்வம் வழக்கறிஞர் நந்தினி இணையரின் திருமணம் ஆகிய இரண்டு திருமணங்களையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நடத்தி வைத்தார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திருமண விழாவுக்குத் தலைமையேற்று, இரு சுயமரியாதைத் திருமணங்களையும் நடத்தியதுடன் மணமக்களை வாழ்த்தி, சிறப்புரை ஆற்றினார்.**

**அப்போது அவர் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியக் கழகச் துணைச் செயலாளர் அண்ணன் வீர்ராகவன் அவர்களின் அன்பு மகன் ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளர் தம்பி சவீன், சகோதரி பொற்கொடி இணையரின் திருமணம், அதேபோல் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பொன்னேரி கிராமத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் தணிகைச் செல்வம், வழக்கறிஞர் நந்தினி ஆகியோரின் திருமணத்தை, நமது குறிஞ்சி இல்லத்தில் நடத்தி வைப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன், பெருமை அடைகிறேன்.

**இரண்டு திருமணங்கள்**

ஒரே மேடையில், இரண்டு திருமணங்களை இங்கு நாம் நடத்தி வைத்து இருக்கிறோம். இரண்டுமே சுயமரியாதைத் திருமணங்கள். இரண்டுமே கழகக் குடும்பங்களைச் சேர்ந்த அடுத்த தலைமுறையினரின் திருமணங்கள். அதை எண்ணிப் பார்க்கும் போது மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

இங்கே, நான் தலைமை உரையாற்ற வேண்டும் என்று கூறி இருந்தார்கள். இந்தத் திருமணங்கள் நம் குறிஞ்சி இல்லத்தில், நம் வீட்டில் நடப்பதால், இது நம் குடும்பத் திருமணம். நம் இல்லத் திருமணம். ஆகவே, தலைமை உரை என்றாலும், எல்லோரையும் வருக, வருக என்று மீண்டும் வரவேற்கிறேன்.

அண்ணன் வீரராகவன் அவர்களைப் பொறுத்தவரை கழகத்திற்காக வழி வழியாக உழைக்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். 1997-ஆம் ஆண்டிலேயே கழக இளைஞர் அணியில் இணைந்து பணியாற்றியவர். அன்றைக்கு அவர் ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக பணியாற்றி, இன்றைக்கு தாய் கழகத்தில் ஒன்றிய துணைச் செயலாளராகச் சிறப்பாக கழகப் பணியை ஆற்றி வருகிறார்.

**பலமுறை சிறை சென்றவர்**

கழகத்திற்காக பலமுறை சிறை சென்றவர். குறிப்பாக, கலைஞர் கொண்டு வந்த சமச்சீர் கல்வியை ஜெயலலிதா அம்மையார் சிதைக்க முயன்றபோது அதை எதிர்த்து போராடியதால், வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர். வாய்தா எதுவும் வாங்காமல் வழக்கை எதிர் கொண்டு, இறுதியாக வெற்றிபெற்ற கலைஞரின் உண்மையான உடன்பிறப்பு என்றால், அண்ணன் வீரராகவன் அவர்கள்தான்.



இன்றைக்கு இந்தத் திருமண நிகழ்ச்சியை நடத்தும்போது, இளைஞர் அணி வளர்ச்சி நிதியாக ரூபாய் ஐம்பதாயிரத்தை வழங்கி இருக்கிறார். அதற்கு இந்த நேரத்தில், நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உழைக்க வேண்டும்**

கழகத்திற்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மணமகன் சவீன் அவர்களும் நமது இளைஞர் அணியில் தன்னை இணைத்துக்கொண்டு இன்றைக்குச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். அவரின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில், கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவின்படி, அவர் காஞ்சி தெற்கு ஒன்றிய துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்கான அறிவிப்பு, இரண்டு நாட்களுக்கு முன்பு தான் `முரசொலி’யில் வெளியானது.

**வாழ்த்தும் பாராட்டும்**

மணவாழ்க்கையில் அடியெடுத்து வைப்பதற்கு மட்டுமல்ல, இளைஞர் அணியில் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்றதற்கும் அவருக்கும் இந்த நேரத்தில் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், தம்பி தணிகைச்செல்வம் அவர்கள் நல்ல படிப்பாளி, சிவில் சர்வீஸ் தேர்வுக்குத் தன்னை தயார்படுத்திக் கொண்டே கழகக் கொள்கைகளையும் இணைய வழியில் எடுத்துரைத்து வந்தவர். அதுமட்டுமல்ல, இன்றைக்கு வழக்கறிஞராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். அவரை கரம் பிடிக்கக்கூடிய தங்கை நந்தினியும் வழக்கறிஞர். வீட்டில் ஒருவர் சட்டம் பேசினாலே பத்தாது என்று, இன்றைக்கு இரண்டு பேர் வீட்டிலிருந்து சட்டம் பேச கிளம்பி இருக்கிறார்கள். கரம் கோர்த்து இருக்கிறார்கள். உங்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சுயமரியாதை வேண்டும்**

திருமண பந்தத்தில் இணைகின்ற மணமக்கள் இரண்டு ஜோடிகளுக்கும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒருவரையொருவர் சுயமரியாதையுடன் நடத்த வேண்டும்.

மணமக்கள் இருவருக்கும் என்னுடைய கோரிக்கை என்னவென்றால், உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு அது ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அழகான தமிழ்ப் பெயரை சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் மாவட்டத்தில் நம் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர். என்.ராஜேஷ்குமார் அவர்களின் ஏற்பாட்டில், இன்றைக்கு இன்னொரு திருமணம் நடைபெற்று இருக்கிறது. அந்த மணமக்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மீண்டும் கழக ஆட்சி**

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தத் திருமணத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு உறுதி என்னவென்றால் வருகின்ற 2026-சட்டமன்றத் தேர்தலில் நம் கழக ஆட்சி மீண்டும் அமைவதற்கு, நீங்கள் அத்தனைப்பேரும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

தலைவர் அவர்கள் குறைந்தது 200 தொகுதி வெற்றிபெற வேண்டும் என்று சூளுரைத்துள்ளார். சபதம் ஏற்று இருக்கிறார். அது உங்கள் மீது இருக்கின்ற, கழகத்தினரின் மீது இருக்கின்ற அந்த ஒரே நம்பிக்கைதான் என்று கூறிக் கொண்டு, மணமக்கள் சவீனும், பொற்கொடியும், மணமக்கள் தணிகைச் செல்வமும், நந்தினியும் பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் தமிழ்நாடும் போல, கலைஞரும் கழகமும் போல, தலைவரும் உழைப்பும் போல பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், கழக மாணவர் அணிச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம். பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், கழக இளைஞர் அணித் துணைச் செயலாளர் அப்துல் மாலிக், தகவல் தொழில்நுட்ப அணியின் துணைச் செயலாளர் மதுரை பாலா, காஞ்சிபுரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் குமரன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி குன்றத்தூர் பேருந்து நிலையம் அருகில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மலர் தூவி மரியாதை செய்து பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். அருகில் குன்றத்தூர் நகர கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

# சைதை தொகுதியில் பாக இளைஞர் அணியினருக்கு சமூக வலைதளப் பயிற்சி!

### எஸ்.ஜோயல் – ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா பங்கேற்பு!

*சென்னை, பிப்.4-*

*சைதை சட்டமன்ற தொகுதியில் பாக இளைஞர் அணி உறுப்பினர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடக்கி வைத்து ஆலோசனை வழங்குகிறார். எஸ்.ஜோயல், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்கின்றனர்.*

*முதல்வர் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்துதலின்படி தமிழகத்தின் துணை முதல்வர் கழக இளைஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க சென்னை தெற்கு மாவட்டம் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பாக வாரியாக தி.மு.க இளைஞர் அணியை சார்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப்பயிற்சி 04.02.2025 (செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணியளவில் சைதாப்பேட்டை அப்துல்ரசாக் தெருவில் உள்ள எஸ்.பி.எஸ். திருமண மண்டபத்தில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ண குமார், கோட்டூர்எஸ்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*பாக இளைஞர்களுக்கான சமூகவலைத்தளப் பயிற்சிக்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணி யன் துவக்கி வைத்து இளைஞர்களுக்கு பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து ஆலோசனைகளை வழங்க உள்ளார்.*

*இந்நிகழ்வில் மாநில இளைஞர் அணி துணை செயலாளர் எஸ்.ஜோயல், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.*

*எனவே இக்கூட்டத்திற்கு சைதாப்பேட்டை சட்டமன்றதொகுதிக்குட்பட்ட சைதை மேற்கு, சைதை கிழக்கு பகுதியைச் சார்ந்த இளைஞர் அணி பகுதி அமைப்பாளர்கள் ஜிம் க.பிரபு, கொடிபாலா, பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி உறுப்பினர்கள் ஆகியோர் தவறாமல் பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இளைஞர் அணி சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறோம்.*

## முதல்வரின் அறிவுரைப்படி

# தருமபுரி மாவட்ட முன்னேற்றத்துக்குப் பாடுபடுவேன்!

### 46–வது புதிய மாவட்ட ஆட்சியாளராகப் பொறுப்பேற்ற ரெ.சதீஷ் பேட்டி!

*தருமபுரி, பிப்.4-*

*தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுரைப்படி தருமபுரி மாவட்ட முன்னேற்றிற்குப் பாடுபடுவேன் என தர்மபுரி புதிய மாவட்ட ஆட்சியர் சதீஷ் குறிப்பிட்டார்.*

*மாவட்ட ஆட்சியர் சதீஷ் பேட்டி வருமாறு :*

*அடித்தட்டு ஏழை எளிய மக்களின் நலனுக்காகவும் தர்மபுரி மாவட்டத்தின் வளர்ச்சிக்காகவும் தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுரையை ஏற்று சீரிய முறையில் பணியாற்றுவேன் என தருமபுரி மாவட்டத்தின் 46வது மாவட்ட ஆட்சியராக ஆட்சியராக புதிதாக பொறுப்பேற்ற ஆர் சதீஷ் தெரிவித்தார்.*

*தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரியில் மாவட்டத்தின் 46வது ஆட்சியராக ரெ. சதீஷ் இன்று மாலை தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தமது அறையில் பொறுப்பு ஏற்றுக் கொண்டார் புதிதாக*



*பொறுப்புக்கு ஏற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சியருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி உள்ளிட்ட மாவட்ட அதிகாரிகள் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர்.*

*தர்மபுரி மாவட்ட ஆட்சியராக பொறுப்பேற்றுக் கொண்ட ரெ.சதீஸ் மரியாதை நிமித்தமாக சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றதாகவும் தெரிவித்த அவர் தமிழக முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் தமிழகத்தில் போதை இல்லாத தமிழகம் உருவாக்குவதற்காகவும் பெண்கள் குழந்தைகள் முன்னேற்றத்திற்காகவும் அடித்தட்டு ஏழை எளிய மக்களின் முன்னேற்றத் திற்காக பாடுபட வேண்டுமெனவும் மேலும் அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.*

*புதிய மாவட்ட ஆட்சியர் சதீஷ் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதன்முறையாக செய்தியாளர்களிடம் பேசும்போது, தர்மபுரி மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் தமிழக முதலமைச்சரின் அறிவுரைக்கு ஏற்றவாறும் சிறப்பான முறையில் பணியாற்றுவேன் எனவும் தர்மபுரி மாவட்ட மக்களின் தேவைகளை அறிந்து அடித்தட்டு ஏழை எளிய மக்களுக்காக பணியாற்றுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.*



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வேண்டி திருத்தணி சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்த நிலையில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வருவாய் அலுவலரிடம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து பெறப்பட்ட மனுக்களை வழங்கி உடனடியாக இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அருகில் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.